# விளம்பரம்™

VLAMBARAM™

: 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 16 AUGUST 15, 1999



வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அமையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

*என்னுடைய சேவையே, எனது வெற்றி



❄ தாய் நாட்டைக் காக்கும் தளபதி-சிவாஜி (பக். 7)

❄ கரப்பான் பூச்சியின் தொல்லை தொடருகிறது.. (பக். 2)

❄ கனடாவில் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டி (பக். 6)

❄ பெண்களின் இளமை ஊஞ்சலாடுகிறது? (பக்.4)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

சபோனாவிற்கு!

*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

*Markham / Eglinton*

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



❄ சாரதிக்கு வகுப்பறைப் பயிற்சிகள் தேவை தானா? (பக். 8)

❄ வீட்டின் விலையில் வட்டி வீதத்தின் பாதிப்பு (பக். 13)

❄ சூரியன் ஒரு நெருப்புப் பந்தா? வாயுப் பந்தா? (பக். 9)

❄ கருவறையிலிருந்து கல்லறை வரையான பயணம் (பக்கம் 5)


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- உயர்ந்த கருத்து ஒன்றை உள்ளத்தினுள் வாங்கிக் கொண்டால் போதும் அதன் மூலம் மேலோன் ஆகிவிடலாம்.
- கடவுளைக் குறித்து தியானம் பண்ணுவது மேலானது. மக்களைக் கடவுளாகக் கருதி அவர்களுக்கு பணிவிடை செய்வது அதிலும் மேலானது.
- அமைதியைக் கொண்டு சினத்தை வெல்லுக. உலோபத்தை கொடையால் வெல்லுக.
- செல்வமல்லாதவன் வறிஞன் ஆகான்; சோம்பல் உடையவனே வறிஞன் ஆகிறான்
- பொறுமையுடனிருப்பவன் அறிவை வளர்க்கிறான் அவசரப்படுபவன் தனது அறிவின்மையை விளம்பரப்படுத்துகிறான்
- குழந்தை போன்று கள்ளம் கபடமற்றிருப்பவன் மிகமிக மேலோன் ஆகிறான். எளிமை மனிதனை உயர்த்துகிறது.

## உலகக் கோலங்கள்

**பெலீஷ் (Belize)**

மத்திய அமெரிக்காவில் உள்ள சிறிய நாடாகும். மெக்சிக்கோ (Mexico), குவாற்றமாலா (Guatemala) கொண்டுரஸ் (Honduras) கொண்டுரஸ் வளைகுடா கடல் (Gulf of Honduras) ஆகியவற்றினை எல்லைகளாக கொண்டது.

**இதன் பரப்பளவு:** 8865 ச.மைல்

**மக்கள் குடித்தொகை:** 2,29,000 பேர் (இறுதி புள்ளி விபரப்படி)

**தலைநகரம்:** பெல் மோபன் (BelMopan) நாட்டின் மத்தியில் உள்ளது)

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர்கள் - 62%
கிறிஸ்தவர்கள் - 30%, பைபிளை பின்பற்றும்
ஏனைய மதத்தவர்கள் - மிகுதி

**பேசும் மொழி:** ஆங்கிலம் (உத்தியோக மொழி)
ஸ்பானிஷ், மாயா, ஹறிவ்

**சுதந்திரம் அடைத்த தினம்:** செப்ரெம்பர் 21, 1981, பிரிட்டிஷ் கொண்டுரஸ் (British Honduras) என்னும் ஆங்கில ஏகாதிபத்தியத்தில் இருந்து சுதந்திரம் பெற்று அரசுரிமை சட்டம் உருவாக்கப்பட்டது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

யுகங்களின் மாற்றங்கள் கலியுகத்தில் வந்துள்ளது. இந்தக் கலியுகத்தில் நமது தமிழர் இலங்கையிலும் வாழ்ந்தார்கள், வாழ்கிறார்கள். கனடாவிலும் வாழ்கிறார்கள். வாழ்வில் மாற்றங்கள் தேவை. ஆனால் அவை சரியான, பிரயோசனமாக, காலத்துடன் ஒத்த, முன்னிற்கு பின்முரண்பாடற்ற மாற்றங்களாக இருப்பதே சிறந்தது. சரி என்று சொல்ல யாரிற்கு உரிமை உண்டு. ஒருவரிற்கு சரியானது மற்றவரிற்கு பிழையானதாக இருக்கலாம் மறுதலையாகவும் இருக்கலாம்.

ஆனால் சிலசெயல்பாடுகள் நியதிக்குள் அடங்க வேண்டும். அதில் சரி, பிழை என்பதில் இருகருத்து இருக்க முடியாது என்பது தான் நெற்றிக்கண்ணனின் தீர்க்கமான தீர்ப்பு. உதாரணத்திற்கு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் உள்ளவர்கள் அந்த சமயத்தின் கட்டுப்பாட்டிற்குள் வாழ்வதே சமயத்திற்கும் மதிப்பு அதனை பின்பற்றும் சமுதாயத்திற்கும், சமுதாய அமைப்பிற்கும் சிறப்பு. அரைகுறை உடுப்புடன் வனபோசனத்திற்கு, கடற்கரைக்கு போகலாம் ஆனால் ஆலயத்திற்கு போகலாமா? இதில் நாத்திகனிற்கும், ஆத்திகனிற்கும் ஒரே கருத்துதான் இருக்க முடியும். இதில் முரண்பாடுகள் இருந்தால் 60 செக்கனை 1 மணி என்றும் கூறலாம்.

***நெற்றிக்கண்ணன்***


விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM



SINGAPORE CELLULAR

Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)

திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (39)



- விஜே குலத்துங்கம்

இங்குள்ள பல வீடுகளிலும், தொடர்மாடிக் கட்டிடங்களிலும் உள்ள பெரிய ஒரு பிரச்சினை 'கரப்பான் பூச்சி' தொல்லையாகும். எவ்வளவு கவனமாக இருந்தாலும், வதிவிடங்களுக்கு வந்து சேர்ந்து விடும். ஆனால் நாங்கள் சுத்தமாகவும், சில கவனங்களை எடுத்தும், சரியான தடுப்பு முறைகளை கையாண்டால் இவற்றை பெருகாமல் கட்டுப்படுத்தலாம். முதலில் இந்தக் கரப்பான் பூச்சியின் இயல்புகள் சிலவற்றைப் பார்ப்போம்.



உலகில் ஏறக்குறைய 3,500 வகையான கரப்பான் பூச்சி உண்டு. இவற்றில் சில இனங்கள் தான் மனிதனுக்கு தீமை செய்கின்றன. மூன்று விதமான இனங்களே வீடுகளைத் தாக்குகின்றன. அவையாவன அமெரிக்கன் இனம், ஓரியன்டல் இனம்,, ஜேர்மன் இனம் ஆகும். இதில் அமெரிக்காவிலும், கனடாவிலும் பிரபல்யமானது 'ஜேர்மன்' பூச்சியாகும். இதன் முதிர்ந்த பூச்சி 3/4 அங்குல நீளமாகும். மஞ்சள் கலந்த மாநிறம் (Yellowish Brown) ஆக இருக்கும். பெண் பூச்சியானது 9 மாதங்கள் வரை உயிர் வாழும். இந்தக் காலத்தில் 140 பூச்சிகளை உருவாக்கும். இவை முட்டைகளை பொரிக்கும் காலம் வரை கொண்டு திரிந்து, பொரிக்கும் காலத்தில் உணவும், நீரும் கிடைக்கும் இடத்திற்கு அண்மையாக ஒளித்து வைத்து விடுகின்றன.

அமெரிக்கன் பூச்சி பெயரில் மாத்திரம் அமெரிக்காவை குறித்தாலும், இவை ஆபிரிக்காவிலே தோன்றி, தற்போது இலங்கை உட்பட, உலகமெங்கும் பரவி உள்ளன. இவை 2 அங்குலம் வரை வளரும். ஒன்றரை வருடம் வாழ்ந்து 430 பூச்சிகளை உருவாக்கும். இவை அளவில் பெரியவையாக இருப்பதால் பெரிய வெடிப்புகளிலும், ஓட்டைகளிலுமே வாழக் கூடியதாக இருக்கும். Orental பூச்சி 1 அங்குலம் வரை வளரும் 78 பூச்சிகளை உருவாக்கும்.

வீடுகளிலும், தொடர்மாடிக் கட்டிடங்களிலும் வாழும் பூச்சியானது ஜேர்மன் பூச்சியாகும்.. இவை உணவுகளையும் துணிகளையும், புத்தகங்களையும் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் உபகரணங்களையும் பழுதடைய வைக்கின்றன. உணவின் மேலாக செல்லும் கழிவுகளை விட்டுச் செல்வதால் உணவைப் பழுதடையச் செய்வது மட்டுமல்லாது சில வியாதிகளையும் பரவச் செய்யலாம். இவை சுரக்கும் ஒருவித எண்ணைத் தன்மையான திரவத்தினால் ஒருவித துர்நாற்றம் உண்டாகின்றது. இந்த மணமானது சில வேளைகளில் பாத்திரங்களை கழுவினாலும் அகற்றப்படாது இருக்கும். அத்துடன் இவற்றின் கழிவுகளும் துர்நாற்றத்தை உண்டாக்கும். சில மனிதர்கள் கரப்பான் பூச்சிக்கு ஒவ்வாமை அல்லது allergic ஆக உள்ளார்கள்.

கரப்பான் பூச்சிகள் அநேகமாக பலசரக்குக் கடைகளில் இருந்து காகிதப் பெட்டிகள், பால், குளிர்பானம் வரும் காகித பெட்டிகளின் மடிப்புகள், மற்றும் பைகள் போன்றவற்றினூடாக வதிவிடங்களுக்கு வந்து சேரும். அத்துடன் குளிர்காலத்தில் கரப்பான் பூச்சியுள்ள வீட்டிற்கு சென்று Closet இனுள் எங்கள் Winter Jacket ஐ வைக்கும் போது, அதனுள் பூச்சிகள் ஏறி எங்கள் வீடுகளில் சேர்ந்து விடும். தொடர்மாடிக் கட்டிடங்களில் ஒரு apartmentம் மற்றும் நீர்க் குழாய்கள், heater போன்றவை செல்லும் துவாரங்களினூடாக இணைக்கப்பட்டிருப்பதால் அதனூடாக பரவுகின்றது.

கரப்பான் பூச்சிகள் பகலில் இருட்டானதும், கண்ணுக்கு தெரியாத இடங்களில் மறைந்திருந்து, இரவில் வெளிவந்து உணவைத் தேடுகின்றன. சமையலறை தண்ணீர் sink இன் கீழும், அலுமாரிகள் தட்டுகள் போன்றவற்றின் வெடிப்புகளிலும் அதன் கீழும், மேசை லாச்சிகளின் பின்னாலும், TV, வானொலி, Cabinetகளின் மூலைகளிலும், மேசை கதிரைக்கு அடியிலும் பதுங்கி வாழ்கின்றன.

இனி மிகவும் முக்கியமான தடுப்பு முறைகளைப் பற்றி பார்ப்போம். வீட்டினுள் வரும் சகல பொருட்களையும் பரிசோதனைக்கு எடுக்க வேண்டும். கூடியளவு பெட்டிகளை வீட்டிற்கு வெளியே வைத்து, பொருட்களை வெளியில் எடுக்க வேண்டும். வெடிப்புகள் துவாரங்கள் போன்றவற்றை அடைத்துவிட வேண்டும். இரவு படுக்கச் செல்லுமுன் சமயலறையில் சிறிதளவேனும் உணவுப் பொருட்கள் சிந்தியில்லாதவாறு சுத்தப்படுத்த வேண்டும். முக்கயமாக ஈரமில்லாமல் நன்கு உலர்த்திவிட வேண்டும். ஈரமில்லாவிட்டால் பூச்சிகள் இறந்து விடும். ஒழுகும் பைப்புகளை திருத்த வேண்டும்.

மற்றொரு முறை இரசாயனப் பொருட்களை பாவிப்பதாகும். பலவடிவங்களிலும், பலமுறைகளில் உபயோகப்படுத்தும் இரசாயனப் பொருட்கள் கடைகளில் கிடைக்கின்றன. இவற்றுள் சிறந்ததென ஆராய்ச்சியாளர்களும், பாவனையாளர்களும் கருதுவது Boric Acid ஆகும். Boric Acid ஐ இருவகைகளில் உபயோகிக்கலாம். ஒன்று மருந்துக் கடைகளில் பிளாஸ்திக் டப்பாக்களில் வரும் Boric அசிட் தூள். இதை அவித்த உருளைக் கிழங்கு அவித்த முட்டையின் மஞ்சள் கரு (அரைப் போத்தலுக்கு இரு உருளைக் கிழங்கும், இரண்டு முட்டையும்) வையும் சேர்த்து பிசைந்து தளபாடங்கள், sink, cupboard போன்றவற்றிலும் இருட்டு மூலைகளிலும் வைத்தால் வெளியில் வரும் பூச்சிகள் இதை உண்ணுவதால் இறக்கின்றன. ஆனால் சிறிய இடைவெளிகள் துவாரங்களில் இவற்றை வைக்க முடியாது. Boric Acid பூச்சிகளின் உடம்பில் பட்டாலே அவற்றை இறக்கச் செய்யும். Hardware கடைகளில், Boric Acid மெல்லிய powder வடிவில் spray வடிவில் (ketch-up போத்தலில் மேலே அழுத்தினால் அதை வெளியில் தள்ளும் கருவிபோல) கிடைக்கும். இந்த spray ஐ அழுத்தும்போது Boric Acid, powder வடிவாக வெளியே விசிறப்படும். இதை கண்ணுக்குத் தெரியாத மெல்லிய படலமாக விசிற வேண்டும். இதன்மேல் பூச்சிகள் நடந்தால் அவை இறக்கும். இதை இருமுறைகளிலும் 6 மாதத்திற்கு ஒரு முறையாக இரண்டு மூன்று முறை செய்தல் வேண்டும். பெரிய பூச்சிகள் அழிந்தாலும், முட்டைகளில் இருந்து சில காலத்தின் பின்னர் பூச்சிகள் வெளியேறும்.

வருமுன் தடுப்பது, சுத்தமாக இருப்பது, வந்தபின் இரசாயனத் தடுப்பு ஆகியவற்றை சேர்த்து செய்வதன் மூலம் கரப்பான் தொல்லையை நீக்கலாம்.

**************************************************************


*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

# யோகாஸ்

☎ :(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 98




**இடமிருந்து - வலம்**

1. பாலைவனக் கப்பல் எனப்படும் மிருகம்
2. பவனி வருதல் (வல-இட)
3. இலையான்
4. கப்பல் தரிக்குமிடம்
6. மிதிலையின் மைதிலி (வல-இட)
8. இந்தசெடியும் இதன் விதையும் மருந்துகாக உதவும்
9. சோறு வடித்த நீர்
11. மாலையில் செந்நிறமாக மாறுவது

**மேலிருந்து கீழ்**

1. இணங்கு
2. அலட்சியம்
5. காதணி
7. நான்கு யுகங்களில் ஒன்று
10. தலைமுடி
12. அடைப்பு நீக்கு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | ட | ந் | தை | | பு | த | ர் |
| த் | | | | | | வி | |
| தி | க் | கு | மு | க் | கா | டு | |
| யோ | | | கூ | | ணி | | ரி |
| க | ள் | ள | ர் | | | ப | தி |
| ம் | | | த் | | பு | ண் | மா |
| | இ | | த | வ | ம் | | ன் |
| வி | டை | | ம் | து | வ | ழு | மு |

**#97இல் வெற்றி பெற்றோர்**

1) L. பத்மநாதன், Toronto
2) N. டிலாணி, North York


இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, மீன், கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்

YOGAS
615 KENNEDY RD.
Scarborough, Ont.

ONTARIO'S DRIVE CLEAN

AJI AUTO WORKS
அஜி ஓட்டோ வேக்ஸ்

Mechanical • Auto Electrical Repairs
• Specialized Brakes • Major and Minor Repairs on Import and Domestic Cars
• Safety Inspection - Certification



VEHICLE EMISSIONS INSPECTION

151 Nantucket Blvd. Unit 5
Scarborough, Ont
M1P 4R5

T. Sabanathan
T. Sivapatham
Tel: (416) 752-2642



கிராமத்து விருந்து

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B

603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

கனடாவில் முதன் முதல் தலைவாழையில் விருந்து படைத்தவர்கள்

AUGUST 30ம் திகதி வரை

2 மட்டன் அல்லது Beef றோள்ஸ்
2 மட்டன் அல்லது மீன் பற்றீஸ்
2 மீன் கட்லட்
2 வடை

99 சதம்


கொத்துரொட்டி - ஆடு, மாடு, கோழி, மரக்கறி
அப்பம் - பால், முட்டை, பிளேன் $3.99
கேட்டரிங் ஓடர்களுக்கு அழையுங்கள் - (416) 266-4240

Easy Weight Lost Programme *Latha:* 416-421-2164

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing

ONTARIO'S DRIVE CLEAN




Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )

☎ [416] **285-4998**



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING





*>Railing >Fencing >Welding*

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



*We are entering 5 th year service in Scarborough.*



**Better Work ...**
**Less Money**

**N.T.E** *Auto* **Inc.**
New Trade Engineering


We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஒட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering




151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN


# "ராசம்மாவின் ராஜ்யம்"

**நகைச்சுவைத் தொடர்... (4)**

***-கலகலப்பு தீசன்-***





ஆரன் Call எடுத்தவையோ? எத்தனைதரம்
கேட்டிட்டன், என்று ரூபன் குரலை மாற்றி
மாற்றிக் கேட்டும் பதில் வரவில்லை...
பதில் வராது...
உலகரும்.. ராசம்மாவும் போட்ட திட்டங்கள்
ஒன்றா.. இரண்டா... இரண்டு ஆண் சிங்கங்கள்
"உனக்கென்ன உலகர்... இரண்டு பெடியள்... இரண்டு
லட்சம்.... (சீதனம்) ம்... என்று முருகேஸ் பெருமூச்சு
விடும் பொழுது
சுவிஸ்? பாங்க் (Swiss Bank) இல் Fix Deposit இல் பணம் கிடப்பது போல
ஒரு பெருமை... ஆனால் லண்டனிலுள்ள மூத்தவர்.. விரும்பிய
திருமணம். 1 லட்சம் அவுட்...... ரூபன்... கடைக்குட்டி... அவரைப் பற்றி...
சொல்லவே... வேண்டாம்



ஊரில் புதிய றலி சைக்கிளில் ரூபன் திரிந்தால் பாடசாலை மாணவிகளின்
கண் முழுவதும் ரூபனில் தான் இன்றெல்லாம் எப்படியெல்லாம் கவிதை.
**"தங்க உடலுக்கு தமிழ் நாட்டை எழுதித் தாறேன்.....**
**இதயத்திற்கு இந்தியாவை எழுதித் தாறேன்......."**
என்று கவிஞர்கள் அன்று
யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் ரூபனைப் பார்த்து
**"மன்மத கோலத்திற்கு மானிப்பாயை எழுதித்தாறேன்.....**
**காவாலிக் குணத்திற்கு காக்கைதீவை எழுதித் தாறேன்.... ..."**
என்றெல்லாம் பாடியிருப்பார்கள்.
உலகரின் விபூதியும் குறியும் மாறா விட்டாலும்,
ரூபனின் கோலமும் குறியும் மாறிவிட்டது.
உலகர் திட்டமிட்ட அடுத்த லட்சமும்..... அதோ கதி
ரூபன் சீர்திருத்தத்தை விரும்புகிறானாம் சீதனம் வாங்க மாட்டானாம் என்று
அண்மையில் தான் ராசம்மா ராசாத்தியுடன் ரெலிபோனில் கதைத்தது உலகரின்
காதில் விழாமல் இல்லை உவனுக்கு ஆர் சீதனம் குடுப்பினம் உலகர் தான்
உவனும் காசு கொடுத்து பொம்பிளை எடுக்க வேணும் என்று முருகேசர் பகிடி
பகிடியாகச் சொன்னது உலகரின் மனதைத் துளைத்தது







அதுவும் அன்றைய ஒன்று கூடலில், அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட
கோழிக்கால்கள் ஆபிரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியில்
வாட்டி வதக்கி வெந்தது பாதி வேகாதது பாதியாக பல்லுக்கு பதம்
பார்த்து விளையாட்டு மைதானங்கள் பூங்காக்கள் புகை
மண்டலமாக ஊர்வம்புகளை, மக்கள் பரிமாறும் சுவாரஸ்ய நிகழ்சி
(மன்னிக்கவும்) ஒன்று கூடலில் ரூபனைப் பற்றி பலரும்
பலவாறாகக் கதைத்தது உலகர், ராசம்மா இருவரது
இருதயத்தையும் B.B.Q போட்ட கோழி போல் வதங்கச் செய்து
விட்டது. கனடாவுக்கு வந்தவுடன் ரூபன் வீடியோ கேம்
(Computer Game) விளையாடும் பொழுது பெடியன் கொம்பியூட்டர்
நல்லா செய்வன் என்று புழுகிக் கொண்டு திரிந்த உலகருக்கு
பிறகுதான் தெரியும் இன்று கொம்பியூட்டரில் கும்மாளம் அடிக்கும்
பிள்ளைகளை பெற்றோர் புரியாமல் பெருமைப்படுவதுமுண்டு.



ஹலோ.... மச்சான் call எடுத்தனியா? ஆமாம்
ரூபன் வந்த இலக்கங்களை அழைத்து நண்பர்களுடன் கதைக்க
தொடங்கி விட்டான் இனி நண்பர்கள் call எடுக்கும் பொழுது
அவர்களுடன் உலகர் ராசம்மா என்ன கதைத்தவர்கள்
என அவர்கள் சொல்லும் பொழுது வீட்டில் பெரிய
விசாரணைக் கமிசனே... நடக்கும் சால்வை உதறும் சத்தம் கேட்டது
**(அருணாசலத்தில் ரஜனி உதறும் சத்தமல்ல அதை விட சற்று குறைவு)**
முருகேசர் அடிச்சா... நான் வெளியிலை போனதென்று சொல்லுங்கோ
என்றபடி... வெளியேறினார் உலகர். *(தொடரும்)*

# ஆரோக்கிய வாழ்வு (39)




- *N.* செல்வசோதி

## என்றும் பெண்களில் இளமை ஊஞ்சலாட

இளமைப்பொலிவுடன் என்றும் இருக்க அனைவருக்கும் ஆசைதான். அதிலும் பெண்களுக்கு இளமையோடிருக்கும் அவா அதிகம் உண்டு. அவர்கள் அப்படியிருக்க வேண்டும் என்று அதிகமான ஆண்களும் விருப்புவர். தாங்கள் இளமையோடிருக்கிறார்களோ இல்லையோ இந்த ஆண்களுக்குத் தமது மனைவிமார்கள் என்றும் இளமையோடிருக்க ஆசை அதிகம்.

இதில் இன்னுமொரு விஷயமும் இருக்கிறது. பெண்களுக்கு இளமை என்றும் மாறாமலிருக்கக் கட்டாயமுண்டு. ஆண்கள் வேலையில் இருந்து ஓய்வு பெற்று விடுவர். பெண்களுக்கு வீட்டு வேலையிலிருந்து ஓய்வு பெற என்றுமே வழியில்லை. இந்நாட்டில் அலுவலகங்களுக்குச் சென்று வேலை செய்யும் நிர்ப்பந்தமும் 90 வீதமான பெண்களுக்கு இருக்கிறது. வீட்டில் செய்ய வேண்டியதைச் செய்து முடித்து விட்டு அவசர அவசரமாக வெளியில் கிளம்பி பல நெருக்கடிகளைச் சமாளித்து அலுவலகங்களுக்குச் சென்று வேலையை முடித்து விட்டு வரும் போது வீட்டுக்கு வேண்டிய பொருட்கள் சிலவற்றையும் வாங்கி வந்து வீட்டு வேலைகளைத் தொடர்ந்து செய்வது பல பெண்களின் தினசர வாழ்க்கையாகும்.




இதனால் இளமையோடு அவர்கள் இருந்தேயாக வேண்டும். இளமை என்பது பார்த்து ரசிக்கவோ கூடிய மகிழ்சியோ மட்டுமல்ல சுறுசுறுப்பு நல்ல உடல்வளம் என்று சொன்னால் மிகையாகாது.

### சுறுசுறுப்பு

சுறுசுறுப்பு என்பது தேவையின்றி அங்கும் இங்கும் ஓடித் திரிவதோ அன்றி கோபத்தில் தாறுமாறாகத் தாண்டவமாடுவதோ இல்லை. எப்போதும் எதையாவது செய்து கொண்டிருப்பதும் இல்லை. பரபரப்பாக அமைதியின்றி அலைந்து கொண்டிருப்பதும் இல்லை.

தேவையானபோது செய்ய வேண்டியதை உரிய காலத்தில் அதற்கு வேண்டிய விரைவோடு செய்வதுதான் சுறுசுறுப்பு. அவசியமானதை தள்ளிப்போடாது மறந்து விடாமல், செய்யாமல் ஒதுக்கி விடாமல் ஏனோதானோ என்று செய்யாமல் அதற்குரிய ஈடுபாட்டுடன் செய்து முடிப்பதே சுறுசுறுப்பு. தலைக்கு நிறம் போட்டு சகல அழகு சாதனங்களையும் (Cosmetic) பூசி வெளியில் உலாவும் போது அழகாகத் தோன்றினாலும் சுறுசுறுப்பாக இயங்காது விட்டால் அது இயற்கையான அழகாகத் தோன்றாது.

### உடல் நலம்

உடல் நம் அன்றாட இயக்கத்திற்கு வளையக்கூடியதாக, நிமிரக்கூடியதாக, திடீரென்று திரும்பக் கூடியதாக, குனியக் கூடியதாக மனத்தில் தோன்றியவுடன் செயல்படக்கூடியதாக உடல் உறுப்புக்களை எல்லாம் இயக்கக் கூடியதாக ஒன்றோடொன்று ஒத்துளைப்பதாக இருப்பதே உடல் நலம். சூட்டையும் குளிரையும் தாங்கக் கூடியதாக இருந்து புறச் சூழ்நிலையால் பாதிப்படையாதிருப்பதே உடல் நலம்.

அழகிய பற்கள், கவனிக்கக் கூடிய கண்கள், ஒத்த ஓசையையும் கேட்டறியக் கூடிய செவிகள், நன்கு உச்சரித்துப் பேசக் கூடிய நாக்கு, நழுவவிடாது பிடிக்கக் கூடிய விரல்கள், சுழன்று இயங்கும் கைகள், உடலை எளிதாகத் தூக்கி நடக்கக் கூடிய கால்கள், பொதுவாக இலேசாகவும் உறுதியாகவும் உடல் அமைந்திருப்பதே சிறந்த உடல் நலமாகும்.

### சமநிலை மனம்

மனம் திடீரென சோர்வடையாமலும் பொங்கி எழாமலும் இருக்க வேண்டும். கவலையடையாமலும், பரவசமடையாமலும் சாந்தமாகவும் இருக்க வேண்டும். ஆசை, அச்சம், கோபம், பொறாமை போன்ற அழுக்குகள் சேராமல் அடக்கமாக இருப்பதுதான் தெளிவான மனநிலைமை -தொடரும் - *நன்றி யோகக்கலை*

**TAMIL INSURANCE CLAIMS CONSULTANT** தமிழில் இலவச ஆலோசனை

**வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு
*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு
*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**

TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766
2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

# என்னுயிர் உங்கள் தயவில் எனக் கூறுகிறார் குழந்தை அஜீனா ரஞ்சித்குமார்



பல்வேறு பத்திரிகைகளின் மூலம், தனக்கொரு குடலையும், ஈரலையும் தானமாக வேண்டி நின்ற மழலை அஜீனா ரஞ்சித்குமாரின் உருவம் எம்மவர் பலரின் நெஞ்சத்தில் ஆணித்தரமாக வேர் பதித்துள்ளது என்பதில் ஐயமில்லை. கடைசியாக உங்களுக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் நமது அஜீனா தமது இரண்டாவது ஆண்டில் கால் பதிக்கிறார் என்பதை நமது வாசகர்கள் அறிந்ததே.

ஆம்! சென்ற 10ம் திகதி அஜீனா தனது முதலாவது பிறந்த தினத்தை பெற்றோர், உற்றார், சகோதரர், ஆதரவாளர்கள் மத்தியில் விமரிசையாகக் கொண்டாடினார். போசனையை அகத்துறிஞ்சும் நுண்சடைமுளைகளின் அமைப்பு வேறுபாட்டில் மிக ஆபூர்வமானதும் அரியதுமான நோய்க்கு வசப்பட்டிருக்கும் அஜீனாவிற்கு அவரது எதிர்காலம் ஒரு கேள்விக் குறி என்பதை நீங்கள் நினைவு கூறலாம். இதனைக் கருத்திற் கொண்டு அஜீனாவின் பெற்றோர் பல எதிர்ப்புகளிடையே தமது மகளின் பிறந்த தினத்தைச் சிறப்பாக நடாத்தினர். இக் கோலாகலத்தின் மத்தியிலும் குழந்தைக்குப் போசனையை குழாய் மூலம் செலுத்தும் இயந்திரக் கருவி, அதனுடன் இணைந்த குழாய்கள், போசனைப் பொருட்களைக் கொண்ட பை, மருந்துப் பைகள் என்பன அஜீனாவிற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டு அவ்வப்போது பயன்படுத்தப்பட்ட செய்கை அங்கு வீற்றிருந்தவர்களின் நெஞ்சங்களை நெகிழ வைத்தது. பெரியோர்களின் பெரும்பாலோர் "தெய்வமே இக்குழந்தைக்கு சீரான வழியைக் காட்டும்" எனத் தத்தமது இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொள்வது போன்ற உணர்வு அவர்களது அங்க அசைவுகள் மூலம் புலனானது. தமது குழந்தைச் செல்வத்திற்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் நல்லாசி கூறிய அனைவருக்கும் ரஞ்சித்குமார், ராஜசெல்வி தம்பதியினர் நன்றி நவில்கின்றனர்.

தற்போது சில வாரகாலமாக அஜீனா தனது வீட்டில் பெற்றோர், உடன் பிறப்புக்கள் என்போருடன் வாழ்ந்து வருகின்றார். இது அவருக்கு பத்து மாதங்களுக்கு மேலாகப் பழக்கப்பட்ட வைத்தியசாலைச் சூழலிலிருந்து முற்றும் வேறுபட்ட சூழல் எனினும் அங்கும் குடும்ப நலச் சேவைப் பகுதியினரூடாக அவருக்குத் தாதியரின் மட்டுப்படுத்தப்பட்ட சேவை அளிக்கப்படுகிறது. வைத்திய ரீதியில் கையாளப்பட வேண்டிய சகல தொழில் நுட்பங்களையும் பயிற்றுவிக்கப்பட்ட அன்னை ராஜசெல்வியும் தந்தை ரஞ்சித்குமாரும் தமது குழந்தையை நன்கு பேணுகின்றனர். மீண்டும் அஜீனாவின் உடல்நிலை தொடர்ச்சியான வாந்தி வடிவில் பெரும் பாதிப்படைந்து வருகிறது. காரணம் இன்னதென அறியாத பெற்றோரும் வைத்திய குழுவினரும் மலைத்து நிற்க்கின்றனர்.

இதுவரை காலமும் குடல், ஈரல் சம்பந்தமான பல்லின அங்கங்களின் ஒன்றிணைந்த மாற்றீட்டுச் சத்திர சிகிச்சை லண்டன் ஒன்ராரியோவிலுள்ள வைத்தியசாலையில் டாக்டர் டேவிட் கிறான்ட் என்பவரால் நடாத்தப்பட்டது. இவ்வைத்திய நிபுணர் தற்போது டொரொன்றோவிற்கு இடம் மாற்றப்பட்டு குழந்தைகள் வைத்தியசாலையிலும் டொரொன்ரோ பெரியாஸ்பத்திரியிலும் தனது சேவையை வழங்குகின்றார். இவரது இடமாற்றம் எமது அஜீனாவிற்கு சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. எனக் கூறுகின்றனர் திரு. திருமதி. ரஞ்சித்குமார்.

மீண்டும் ஓர் தாழ்மையான பகிரங்க விண்ணப்பம் அஜீனாவின் பெற்றோர்களின் சார்பில் எமது தமிழ்ப் பெற்றோர்கள் யாராவது தமது குழந்தை ஒன்றைக் காலதேவனுக்கு இழக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படின், அக்குழந்தையின் பயனுள்ள அங்கங்களைத் தானம் செய்வதன் மூலம் நோயினால் பாதிக்கப்பட்டு அங்க மாற்றீட்டு சத்திர சிகிச்சைக்கு காத்திருக்கும் வேறு குழந்தைகளுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும் உன்னத சேவையை வழங்கலாம் என்பதை உணருங்கள். அங்க தானம் மனிதருக்கு மனிதர் செய்யக்கூடிய சிறந்த தானம் என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் தமிழ் நெஞ்சங்களே.

எமது அஜீனாவிற்குத் தேவைப்படுவது குடலும் ஈரலும். சந்தர்ப்பம் ஏற்படின் தந்து உதவுங்கள் எமது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். என்றென்றும் உங்களுக்கு எமது நன்றிகள். திரு. திருமதி. ரஞ்சித்குமார்.

மேலதிக தொடர்புகளுக்கு:


**ஹெலன் சிமியோன்,** பொதுசன நடவடிக்கை அதிகாரி, ரொரன்றோ குழந்தைகள் வைத்திய சாலை (416) 813-6380

**ஷெரில் ஜக்சன்,** தாதியர் குழு மேலதிகாரி, ரொரன்றோ குழந்தைகள் வைத்தியசாலை (416) 813-7728

ரஞ்சித்குமார் (416) 498-0123

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



தெள்ளுத்தமிழ் கொண்டு தேன்மொண்டு சீரிய முறையில் தெள்ளிய நடையில் அமுதாய்ப் பருக திருக்குறளைத் தந்த இத் தெய்வப்புகழ் வள்ளுவனை மிஞ்ச இவ்வுலகில் யாருமில்லை என்பதை யாருமே மறுக்கவோ, மறைக்கவோ , மறக்கவோ முடியாது.

**"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று"
"பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்றின் பவர்க்கு"** இதிலிருந்து நாம் என்னத்தை அறிகிறோம் எ ல் மனிதன் எவ்வளவு கவனமாக பணத்தைப் பாதுகாக்க வேண்டும். பணத்தை உழைப்பது கடினம்; அதைச் சேமிப்பது மிகக் கடினம்; அப்பணத்தை நல்ல வழியில செலவு செய்வது மிகமிகக் கடினம். ஆகவே மீண்டும் மீண்டும் அறிவுறுத்துகிறேன் மிகவும தாழ்மையாக; என் இனிய தமிழ்ப் பெருங்குடிமக்களே திட்டமிட்டு வாழுங்கள். சிந்தித்து செயலாற்றுங்கள். சிறுகக் கட்டி பெருக வாழுங்கள். பணத்தைத் தெய்வமாக மதியுங்கள். தெளிந்த சிந்தனையின்றி, செயலாற்றுத் திறனின்றி ஆங்காலம் தனிலே பணத்தை அவமே இறைத்து விட்டு சாங்காலம் தனிலே சங்கரா சங்கரா என்றால் போனபணம் திரும்ப வருமா? ஆகவே பணத்தின் அருமையை நன்கு உணருங்கள். வந்தபின காப்பவனை விட வருமுன் காப்பவனே புத்திசாலி.

ஔவையார் கூறியது போல்

**"கல்லானே ஆனாலும் கைப்பொருள் உண்டானால்
எல்லோரும் வந்து எதிர்கோள்வர்
இல்லானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதே அவன் வாயிற்சொல்."** இதிலிருந்து பணத்தின் பெருமையை ஔவையார் எப்படி வலியுறுத்துகிறார் என்பது தெரிகிறது. அதாவது பணம், பொருள் இவையே வாழ்க்கையல்ல. இவை பதினாறு செல்வங்களுள் ஒன்று என்பதை மறந்து விடாதீர்கள். பணம் வாழ்க்கைக்கு ஆதாரமே அன்றி பணம் தான் வாழ்க்கை அன்று.

**"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு."** இதையே அந்த தமிழ் முனி சிறப்பாக விளக்குகிறார். இவ்வுலக வாழ்வை நாம் சிறப்பாக வாழ்வதற்கு பொருள் எவ்வளவு எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்கு அவ்வளவு நாம் இறந்த பின்பு போகின்ற விண்ணுலகிற்கு அருள் மிகமிக முக்கியம். நாம் அருளையும், பொருளை சரிசமமாக தேடப்பழகிக் கொள்ள வேண்டும். சிலர் இந்த வாழ்க்கையின் தத்துவத்தை சிறுதும அறியாது தம்மால் இயன்ற பாவங்களை முடிந்தவரை செய்து மேலும் மேலும் பாவ மூட்டைகளை சுமக்கின்றனர். எல்லாவற்றிற்கும் காரணம் அவர்கள் அறியாமையும அருளின்மையுமே காரணம். மற்றும் தாம் வாழ்ந்தால் போதும் என்ற சுயநல உணர்வுமே ம்.

இவ் வாழ்வு நீர்க்குமிழி என்பதை மறந்து விடுகிறார்கள். கருவறையில் இருந்து கல்லறை வரை வாழ்க்கை ஒரு துன்பம் மிகுந்த இன்பம் நலிந்த ஒருசிறு பயணம் என்பதை மறந்துவிடுகிறார்கள்.

**"நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."** இவ்வுலகம் அடைந்துள்ள பெருமைகளுள் இதுவும் ஒன்று. அதாவது நேற்றிருந்த மனிதன இவ்வுலகில இன்று காணமல் போவது போன்ற பெருமையை உடையது இந்த உலகம். அதாவது வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்பதன் உண்மையை தம்மனதிலே மிக ஆழமாக உணர்ந்து பேராசைப் பேயின் அடிமைகளாகி பெருநரகத்தில் விழுந்து தாமும் கெட்டு தம் குடும்பமும் கெட்டு நாடும் கெட்டு உலகம் கெட வழிசமைக்கமாட்டார்கள்.

வள்ளுவர் நமக்கு அறிவுறுத்துகிறார்; மனிதன் எந்த சந்தர்ப்பத்திலும் தன் நிலை தாழாது வாழவேண்டும். அதுதான் வாழ்க்கை என்பதை மறந்து விடக்கூடாது. பெரும் அவமானப்பட்டு , அல்லல் பட்டு எந்த பாவம் செய்தும் அந்தப் பணத்தை உழைத்து குவித்து ஆயிரம் வருடங்களுக்கு வாழ வழிதேடும் வண்ணம் பழிபாவத்தை மறந்து பெரும் பாவத்தை தேடிக்கொள்கின்றனர்.


**"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை."** தலைமயிர் தலையில் இருக்கும் போது எப்படியெல்லாம் பெருமையாக இருக்கிறதோ அதேபோலத்தான் மனிதனின் விழுமிய உயர்ந்த சிறந்த ஒழுக்கமான பண்புள்ள தெய்வீக வாழ்வு அமையும். அதேமனிதன் ஒழுக்கம் தவறி மானமிழந்து தீயவனாக மாறும்போது தலையிலிருந்து உதிர்ந்த மயிருக்குச் சமமாகக் கருதப்படுகிறான். **"களவினா லாகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்."** என்ற பேருண்மையை யாவரும் மறந்து விடுகிறார்கள். நாம் அறவழியில் நில்லாது குறுக்கு வழியில் பொருளை அபகரித்து கொள்ளையடித்து, ஏமாற்றி தேடிய கோடி செல்வமெல்லாம் அளவிறந்து மலைபோல குவிவது போலத தென்பட்டாலும் அவ்வளவும் காலப்போக்கில் வந்தது எங்ஙனம், போவது அங்ஙனம என்பதுபோல் அப்பொருள் அவரை விட்டு நீங்கிவிடுவது உறுதி. இதை யாருமே ர்ந்து கொள்ளதில்லை. இது உண்மை; உண்மையில் உண்மை. இந்த உண்மையை அறிந்து செயல்படுவீர்களானால் வாழ்வு இன்பமயமாகாதா?

**"அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை"** அதாவது நாம் மற்றவர்கள் அழ, அழ , வெந்து நொந்து போக கைப்பற்றிய செல்வமெல்லாம் அதேபோல் நாம் அழுதழுது இழந்து விடுவோம். இந்த உண்மையை யாரும் மறக்கமுயுமா. நல்ல வழியிலே தேடிய செல்வம் என்றும் இன்பம் பயக்கும், அதனை இழந்தாலும் மீண்டும் பயன் தரும். நல்வாழ்வு அளிக்கும் என்பதை குறள் நமக்கு வலியுறுத்துகிறது. இதை நீங்கள் எவ்வகையிலும் சந்தேகப்படத் தேவையில்லை. உங்கள் அனுபவத்தில் நீங்கள் உணருவீர்கள், உணர்ந்திருப்பீர்கள். நிச்சயம் உணரத்தான் வேண்டும். இதைவிட சிறந்த வாழ்விற்கு சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை. இந்தக் கலியுகம் கொண்டுள்ள சிறப்பு இயல்புகளில் நான் உற்று நோக்கி அறிந்தது என்னவெறால் அவரவர் செய்த பாவத்திற்கு கண்முன்னாலே பெரும் துன்பத்தை அனுபவித்து இறந்து போவதை கண்டு பெரும் வருத்தப் பட்டது உண்டு. புரியாத புதிராகவும் இருந்ததுண்டு. இதையிட்டு பல தடவை புத்தர், காந்தி, ஜேசு போன்வர்களுடன் வாதாடியும் இருக்கிறேன். ஏன் மனிதன் திரும்பத் திரும்பத் தெரிந்து கொண்டும் பிழையை விடுகிறான் என்று. அந்தோ பரிதாபம் ஏன் இப்படியாக மனிதன் அழிந்தொழிந்து போகிறான் என்று. இதற்கு காரணம் அறியாமையா? ஆசையா? ஊழ்வினையா? ஆணவமா? மாயையா? விதியா? இல்லை கதியா? இல்லை எல்லாமே ஒரு சதியா என்பதை நீங்களே தீர்மானித்து நல்வழியில் நடந்து கொள்ளுங்கள் என்று மிகவும் பவ்வியமாக வேண்டிக்கொள்கிறேன்.

(தொடரும்)

6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்
அப்சராஸ்
RESTAURANT & CATERING





* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்

அழையுங்கள் (416) **412-6164**
**2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)**

**AIRPORT SERVICE & MOVING VAN**

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய் வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு



☎: (416) **759-0557**



**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**


குடிவரவுச் சட்டம்
**Immigration Law**

**குற்றவியல் சட்டம்**
**Criminal Law**

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



*வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?*

அடுத்து
செய்யவேண்டியது என்ன?



முதலில்
வைத்தியசாலைக்கு
செல்லுங்கள்...

*பின் இவரை அழையுங்கள்...*

எஸ்.கே. தீசன்
(416) **631-6322**

**விளம்பர வினாடி வினா**

இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்
இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)
குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -
1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு
1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்
இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.


# விளையாட்டுத் தகவல்கள் (36)

-எஸ். கணேஷ்



## OH CANADA !!!
## PAN AM GAMES-99

வடஅமெரிக்காவிலேயே மிகப் பெரிய Athletic (மெய்வல்லுனர் போட்டிகள்) நிகழ்ச்சியாக கருதப்படும் Pan American Games July 23ம் திகதி தொடங்கி August 8ம் திகதியுடன் நடந்து முடிவடைந்துள்ளது. இது கனடாவிற்கு மேலும் சிறப்பு தரும் ஒரு வைபவமாகும். Noth Americaவிலேயே Atlantic Olympicsக்கு பின்பு நடைபெற்ற மிகப்பெரிய விளையாட்டுதுறை (Multi Sport Event) நிகழ்ச்சி இது என்றால் மிகையாகாது. 1951ம் ஆண்டு தொடங்கப்பட்டு 4 வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டிகள் 13வது தடவையாக கனடாவின் Winnipeg நகரிலே சிறப்பாக நடந்து முடிந்துள்ளன. இப்போட்டிகளில் 42 நாடுகள் North, South, Central America மற்றும் கரேபியன் நாடுகளும் கலந்து கொண்டன. 41 விளையாட்டு துறைகளும் 2,300 பதக்கங்களும் 330 விளையாட்டு நிகழ்சிகளும் (Events) இதில் அடங்கும். 400 Million பார்வையாளர்கள் உலகம் முழுவதும் இருந்து கண்டு களித்தார்கள். இதுவே கனடாவில் நடைபெற்ற முதல் மிகப பெரிய விளையாட்டு நிகழ்ச்சியாகும். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் இம்முறையே கனடா அதிக அளவு பதக்கங்களை பெற்றுள்ளது மிகவும் குறிப்பிடக் கூடிய விடயமாகும். இதுவரை நடைபெற்ற போட்டிகளில் கனடா பெற்றுக்கொண்ட பதங்கங்களின் எண்ணிக்கையை இங்கு பார்ப்போம்.




| ஆண்டு | நடைபெற்ற இடம் | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1951 | Buenos Aires | கனடா போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை | | | |
| 1955 | Buenos Aires | 4 | 4 | 3 | 11 |
| 1959 | Chicago | 7 | 22 | 27 | 56 |
| 1963 | Sao Paulo | 11 | 25 | 27 | 63 |
| 1967 | Winniper | 16 | 42 | 50 | 108 |
| 1971 | Cali | 17 | 20 | 41 | 78 |
| 1975 | Mexico City | 16 | 35 | 35 | 86 |
| 1979 | San Juan | 24 | 43 | 71 | 138 |
| 1983 | Caracas | 18 | 44 | 47 | 109 |
| 1987 | Indianapolis | 30 | 57 | 75 | 162 |
| 1991 | Havana | 22 | 46 | 59 | 127 |
| 1995 | Mardel Plata | 48 | 60 | 69 | 177 |
| 1999 | Winnipeg | 64 | 52 | 80 | 196 |

இப்போட்டிகளில் Eric Lopel என்ற Cuba நாட்டை சேர்ந்த வீரர் 5 Gold, 1 Silver பதக்கங்களை பெற்று மொத்தமாக 6 பதக்கங்களைப் பெற்ற ஒரே ஒரு சிறந்த வீரர் என கணிக்கப்பட்டுள்ளார். அடுத்து Gustauo Bordes என்ற பிரேசில் நாட்டை சேர்ந்த வீரர் 5 பதக்கங்களைப் பெற்றுள்ளார். பெண்கள் பிரிவில் Jessica Deglau என்ற கனேடிய நாட்டு பெண் வீராங்களை 4 தங்கபதக்கங்களையும் 2 வெள்ளிப பதக்கங்களையும் பெற்றுள்ளார். பெண்கள் பிரிவில் கனடா நாட்டை சேர்ந்த Jessica, Laura, Joanne ஆகிய வீராங்கனைகள் தலா 6,4,4 என பதக்கங்கள் பெற்று ஆகக் கூடிய தனி வீரர்களினாலே பெறப்பட்ட பதக்கங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்று கனடாவிற்கு புகழ் சேர்த்துள்ளனர்.

Winnipeg -99 போட்டிகளில் கனடா 64 தங்கப் பதக்கங்களையும் 52 வெள்ளிப பதக்கங்களையும் 80 Bronze பதக்கங்களையும் பெற்று மொத்தமாக 196 பதக்கங்களை பெற்று இரண்டாவது இடத்தை தட்டிச் சென்றுள்ளது. இது கனடாவின் மெய்வல்லுனர் துறையில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றம் எனக கருதப்படுகிறது.

**Final Medal Standings (முதல் பந்து நாடுகள்)**
**Winnepeg -1999**

| நாடு | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|
| 1.அமெரிக்கா | 106 | 110 | 80 | 296 |
| 2.கனடா | 64 | 52 | 80 | 196 |
| 3.கியூபா | 69 | 40 | 47 | 156 |
| 4.பிரேசில் | 25 | 32 | 44 | 101 |
| 5.ஆஜன்ரீனா | 25 | 19 | 28 | 72 |
| 6.மெக்சிகோ | 11 | 16 | 30 | 57 |
| 7.கொலம்பியா | 7 | 17 | 18 | 42 |
| 8.வெனிசுலா | 7 | 16 | 17 | 40 |
| 9.யமேக்கா | 3 | 4 | 6 | 13 |
| 10.போட்டோரிக்கோ | 1 | 3 | 9 | 13 |

இதில் குறிப்பாக இன்று உலக நாடுகளில் Sports என்ற கொள்கை பறிபோய பணம் போதைப் பொருள் அரசியல் என்ற நோய்கள் Sportsஐ பற்றிப் பிடித்து விட்டன. இது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். இவ் 13வது Winnepeg உலகப் போட்டிகளில் 7 தங்கப் பதக்கங்கள் வீரர்களிடம் இருந்து போதை பொருள் பாவனையால் பறிக்கப்பட்டுள்ளன. 2 கியூபா, 2மெக்சிகோ வீரர்களின

பூச்சிகளை அழிக்கவே முடியாதா?
PEST CONTROL
* எலிகள் * கரப்பான் பூச்சிகள்
* எறும்புகள் * சிலந்திகள்
போன்றவற்றை முற்றாக அழித்து நிவாரணம் பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
(416) 892-4994
7 நாட்களும் அழைக்கலாம்
* 100% முற்றாக அழிக்க முடியும் என்று எழுத்து மூலம் தரப்படும்.
* ஒருதடவை அணுகுங்கள் உண்மை புரியும்.
* WE ARE QUALIFIED, PROFESSIONAL, INSURED AND BONDED.
* NO NEED TO LEAVE TO HOME OR REMOVE DISHES DURING TREATMENT.




2 கியூபா, 2மெக்சிகோ வீரர்களின் தங்கப் பதக்கங்களுடன், கனடாவின் Roller Hockey Team இன் Goal Keeper ஆன Steve Vezina இன் தங்கப் பதக்கமும பறிபோய் உள்ளது. 1992 ஆண்டு Olympic Champion ஆன டொமினிக்கன் நாட்டை சேர்ந்த உலகத்திலேயே World Record ஐ உயரம் பாய்தலில் தக்கவைத்திருக்கும் Javier Stotommayor என்ற வீரரின் தங்கப்பதக்கமும் பறிபோயுள்ளது. இதில் மிகவும் வேடிக்கைக்குரிய ஒரு முக்கிய நிகழ்சி என்னவெனில் Canoe-Kayak என்ற போட்டியில் Olympic இல் தங்கப் பதக்கத்தை பெற்ற பெண் வீராங்கனை இவ் Winnepeg போட்டியிலும் தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார். பின்பு பரிசோதனைக்கு உட்படுத்திய போது இவர் பெண் அல்ல ஆண் என்று நிரூபிக்கப்பட்டுள்ளார். தற்போது இவரிடம் இருந்து தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நோக்கும் போது, அரசியல், பணம், போதைப்பொருள், மற்றும் தற்போது ஆண், பெண் Sex மாற்றம் என்பன Sports ஐ எள்ளிநகையாடும் ஒரு இடத்திற்கு கொண்டு வந்துவிட்டது. இவ்விஞ்ஞான யுகத்தில் இன்னும் என்ன, என்ன மாற்றங்கள் ஏற்படப் போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

-நன்றி

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*—தொகுத்துத் தருபவர் - பரம்*

இன்றைய தொடரிலும் 1963ம ஆண்டிற்குரிய படங்களின் தொகுப்பை மேலும் ஆராய்வோம். இவ்வருடம வெளிவந்த வர்ணப்படம் 'லவகுசா', இராமாயணத்தின் கதையை வைத்து அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன இப்படம் வர்ணத்தில் மிகச்சிறப்பாக இருந்தது.

[...]றைய காலகட்டத்தில் மிகப போ[...]றத்தக்கதாக இருந்தது "நானும ஒரு பெண்" இவ்வருடத்திற்குரிய சிறந்த படம். இதில் விஜயகுமாரி சிறந்த நடிகையாக தெரிவு செய்யப்பட்டார். சிவாஜி கணேசன் போடாதவேடங்களே இல்லை என்றே ரசிகர்கள் கூறுவார்கள். நான சிவாஜியின் நடிப்பை ரசித்த பாத்திரமும், படங்களில் ஒன்று- 'இரத்த திலகம்.' இதில சிவாஜிகணேசன் அவர்கள தாய்நாட்டைக் காக்கும் தளபதியாக மிக நேர்த்தியாக, சிறப்பாக நடித்துள்ளார். இதில் வரும் 'பசுமை நிறைந்த நினைவுகளே...' என்ற பாடல என்றும் மனதை விட்டகலாத பசுமையான பாடலாகும். இப்பாடல எப்போதும் வாழ்வின் பின்பக்கத்தை நினைவு படுத்தக்கூடிய சிறந்த பாடல்களில் ஒன்று.



'தர்மம் தலைகாக்கும்' -சரோஜாதேவியுடன்

1963ம் ஆண்டு MGR இற்கு நிறைய படங்கள் நடிக்க வாய்ப்புகள் ஏற்பட்டது. MGR 9 படங்கள் இவ்வருடம நடித்துள்ளார். இதுவே அவர் நடித்த அதிகூடிய படங்கள் ஆகும். இதே எண்ணிக்கையை 1966ம் ஆண்டும M[...] நடித்துள்ளார். இவ்வருடம் இவர் ந[...]த படங்கள் 'பணத்தோட்டம்', 'கொடுத்து வைத்தவள்', 'தர்மம தலைகாக்கும்', 'கலைஅரசி', 'பெரிய இடத்துப் பெண்', 'ஆனந்த ஜோதி', 'நீதிக்கு பின்பாசம்', 'காஞ்சித தலைவன்', 'பரிசு'. இதில் "பெரிய இடத்துப் பெண்" "நீதிக்கு பின் பாசம், 100 நாட்கள் ஓடிய படமாகும்.

*(சினிமா தொடரும்)*

மொத்தமாக 42 படங்கள் வெளிவந்த போதும் 5 படங்கள் மட்டும் 100 நாட்களை கடந்து ஓடியது. அவையாவன 'அன்னை', 'ஆலயமணி', 'இருவர் உள்ளம்' 'பெரிய இடத்து பெண்', 'நானும் ஒரு பெண்', 'நீதிக்குப்பின் பாசம்' இதில் 'ஆலயமணி' சிவாஜியின் 1962ம் ஆண்டுப் படமாக இருந்த போதும் 1963ம் ஆண்டு 100 நாட்கள் ஓடிய படமாக கணக்கிடப்பட்டுள்ளது.

சிவாஜி அவர்களும் இவ்வருடம் 10 படங்கள் நடித்துள்ளார். ஆனால் சிவாஜி பிறிதொரு வருடம் 13 படங்கள் நடித்துள்ளார். (1982) சிவாஜியின் 10 படங்கள் முறையே 'சித்தூர் ராணி பத்மினி', 'அறிவாளி, 'இருவர் உள்ளம்', 'நான் வணங்கும் தெய்வம்', குலமகள் ராதை, 'பார்மகளே பார்', 'குங்குமம்', ரத்த திலகம்', 'கல்யாணியின் கணவன்', 'அன்னை இல்லம்' ஆகும். இவற்றில் 'ஆலயமணி', 'இருவர் உள்ளம்' என்பன 100 நாட்கள் ஓடிய படங்களாகும்.

## நான் வாழப் போகிறேன்



**-வீணை மைந்தன்**

### சுவடு 35 (தொடர்ச்சி)

சிவாஜி-சாவித்திரி நாயகன் நாயகியாக நடித்தவற்றுள் 'கை கொடுத்த தெய்வம்' திரைப்படம் மிகவும் உன்னதமான பாத்திரப்படைப்புக் கொண்டது. திருமதி. சாவித்திரியின் நடிப்பாற்றலுக்குச் சவாலாக அமைந்த படம். தோண்டத் தோண்டத் தங்கம் கிடைப்பதுபோல் இயக்குநர் திலகம் கே.எஸ். கோபால கிருஷ்ணன் அவர்களின் திரைக்கதையில் சிருஷ்டித்த அந்த வெகுளிப் பெண் பாத்திரம் சாவித்திரியின் நடிப்புச் சுரங்கத்திலிருந்து அள்ளி அள்ளி எடுக்கப்பட்டு மெருகூட்டப்பட்டிருந்தது. இணையாக சிவாஜி ஆர்ப்பாட்டமில்லாமல் மிக இயல்பாக நடித்திருப்பார். திருமதி. சாவித்திரிக்கு 'நடிகையர் திலகம்' என்ற பட்டம் இப்படத்தின் மூலம் தான் நிலையானது.

அடுத்து நாயகன் நாயகியாக இல்லாமல் அண்ணன் தங்கையாகப் பாத்திரமேற்று இன்றும் கூடத் திரைப்பட வரலாற்றில் எவராலும் அணுகமுடியாத ஜீவனுள்ள கதையாகப் பாத்திரபடைப்பாக பாசமலர்களாக நிலைத்து நிற்கும் அந்தக் காவியப் பாத்திரங்களையும்.. வசனம் எழுதிய ஆரூர் தாஸின் உணர்ச்சித்தமிழ் வரிகளையும் பதிவு செய்வோம்.

### சுவடு 36

கவிஞர் வைரமுத்து அவர்களது பிறந்த நாளான ஜ"லை 13ம் நாள் தமிழகத்தில் கவிஞர்கள் தினமாகக் கொண்டாடப்படும். அவருடைய பிறந்தநாளை முன்னிட்டு கவிஞர் அவர்கள் தான் எழுதிய நூல் ஒன்றை தனது ஆசான் கலைஞர் பெருமகனாரின் கரங்களால் வெளியிட்டு வைப்பார். இவ்வருடமும் கவிஞர் வைரமுத்து அவர்களது 29வது இலக்கியப் பிரசவமாய் அவரால் குங்குமம் - குமுதம் இதழ்களில் வாரம் தோறும் எழுதப் பெற்று வந்த தொடர் கவிதைகளின் தொகுப்பு "பெய்யெனப் பெய்யும் மழை" எனும் தலைப்பில் கலைஞர் அவர்களினால் வெளியிடப்பெற்றது. இவ்விழாவில் பேருரையாற்றிய கலைஞர் அவர்கள் பேசும் போது..." தம்பி வைரமுத்து அவர்களும் அவரது துணைவியார் டாக்டர் பொன்மணி வைரமுத்து அவர்களும் மிகுந்த ஒத்திகைக்குப் பின் மிக அழகாக ஏற்ற இறக்கங்களுடன்... நமது நடிகர் திலகம் வசனம் பேசுவது போல்.... கவிதைகள் சிலவற்றை வாசித்து அரங்கேற்றினார்கள்..." என்று குறிப்பிட்ட இடத்தை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றல்ல நேற்றல்ல... கலைஞர் அவர்கள் திரைப்பட வசனம் எழுதத் தொடங்கிய கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்து... 'பராசக்தி' திரைப்படத்திலிருந்து சமீபத்தில் சிவாஜி அவர்கள் நடித்து வெளியான படையப்பா வரை "நமது நடிகர் திலகம்" போல் வசனங்களை ஏற்ற இறக்கத்துடன் பேசக் கூடிய ஆற்றல் வேறு எந்த நடிகரிடத்தும் இல்லையென்பதையும் கலைஞர் அவர்கள் நாசூக்காகச் சுட்டத் காட்டியதையும் அவ்விழாவில் யாவரினதும் கவனத்தைப் பெற்றது. கலைஞர் பேசும்போது எழுந்த கரவொலியே அதற்குச் சான்று. இதையேன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் வருங்காலத்திலும் சரி - நிகழ் காலத்திலும் சரி உங்களில் யாராவது சிவாஜி வசனம் பேசி நடித்துக் காட்டவோ பயிற்சி பெறுவோ முயலக்கூடும். அப்படித்தான் 'பாசமலர்' திரைப்படத்திற்கு வசன்ம் எழுதும் பாக்கியம் திரு. ஆரூர்தாஸ் என்ற இளைஞரைத் தேடிவந்தது.

இளைஞர் ஆரூர்தாஸ் அந்தச் சம்பவத்தை இப்படி நினைவு கூருகிறார் "....முப்பத்தெண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்தப் பொற்கால கட்டத்தில் என் எழுத்துக்களில் ஈடுபாடு கொண்டவரும்...... நான் கதைவசனம் எழுதிய முதல் படமான தேவர் பிலிம்ஸ் தயாரிப்பான "வாழவைத்த தெய்வம்" படத்தின் கதாநாயகனான திரு. ஜெமினி கணேசன் என்னிடம். "தாஸ்"! நீ சிவாஜி கணேசன் படத்திற்கு வசனம் எழுத ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் நானும் சாவித்திரியும் நடிக்கிறோம். பீம்சிங் டைரக்ட் செய்யப் போகிறார் என்றார்.

தங்க மணிகளை விதைத்து வைரக் கதிர்களை அறுவடையாக்கிக் குவிக்கும் வரலாறு போற்றும் அந்த வண்டல் மண்ணில் பிறந்து வளமான கருத்துக்கள் கற்பனையுமாய் வளர்ந்து தேரோடும் திருவீதிகளில் தவழ்ந்து புரண்டு பற்றிப் படரக் கொழு கொம்பு தேடும் இளங்கொடிப் பருவத்தில் இருந்த நான் எதிர்பாராத இந்த இனிய செய்தியைக் கேட்ட அந்த நொடிப் பொழுதில் இமயத்தின் விளிம்பைத் தாவிப்பிடித்து எவரெஸ்ட் முகட்டை எட்டிப் பிடித்து விட்டேன். தட்டிப் பார்த்து கட்டிப் பார்த்து இவன் முந்றியிருக்கிறானா? என்று கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கடினமான காலம் அது. என்னைச் சிவாஜி கணேசன் தட்டிப்பார்க்காமல் பீம்சிங் ஆட்டிப்பார்க்காமல் வசனம் எழுதும் பொறுப்பை ஏற்றேன். (அன்புள்ள வாசகர்களே திறமையுள்ள ஒருவனுக்குச் சரியான சந்தர்ப்பமும் அதிஷ்டமும் கைகூடிவந்தால் அவள் சிகரங்களை நோக்கிச் சிறகடிப்பான் என்பதற்கு ஆரூர்தாஸின் அநுபவம் ஒரு சான்று. நாளை நீங்களும் ஒரு வசனகர்த்தாவாகவோ - சிறந்ததொரு நடிகராகவோ கூட மிளிரலாம். இதோ உங்கள் நடிப்புப் பயிற்சிக்கும் வசனம் பேசும் ஆற்றலுக்கும் ஆரூர்தாஸ் எழுதிய முதல் சீன்...) 'பாசமலர்' திரைப்படத்தில் முதலாளி சிவாஜி கணேசனும் (ராஜசேகரன்) தொழிலாளி ஜெமினி கணேசனும் (ஆனந்தன்) மோதுகின்ற அற்புதமான காட்சி.

**சிவாஜி:** பொறியிலே பலகாரம் வைப்பது எலியின் பசியைப் போக்கவா? புற்றுக்கு அருகே நின்று மகுடி ஊதுவது நாகத்தின் காதுகளை நாதத்தால் குளிரவைக்கவா? காட்டிலே குழி பறிப்பது யானை ஓய்வு பெறுவதற்கா? கணையை வில்லிலே பூட்டுவது கலைமானுக்கு வேடிக்கை காட்டவா?... அல்ல... இதெல்லாம் பிறர் துன்பத்தில் இன்பம் காண வேண்டும் என்ற பேய் வெறி அந்த வெறிதான் உனக்கும்"



**ஜெமினி:** தவறு... மெழுகுவர்த்தி எரிந்து ஒளியைக் கொடுப்பதோடு தன் மேனியையும் உருக்கிக் கொள்கிறது. ஊதுபத்தி நறுமணத்தைக் கொடுத்த பிறகு உருவ மற்றுச் சாம்பலாகிறது. தேய்ந்து தேய்ந்து மணத்தைக் கொடுக்கும் சந்தனக் கட்டை போன்றவர்கள் தியாகிகளும் பொதுநல வாதிகளும் என்பதைப் புரிந்து கொள்"!

இத்தகைய வசனங்களைக் கொண்ட காட்சிகளை நான் படித்து முடித்ததும். சிவாஜி - ஜெமினியிடம் சொன்னார். "எனக்கு ஒரு அருமையான வசனகர்த்தாவை அறிமுகம் செய்தால் களத்தில் வெற்றிகண்ட வீரன் வாளை முத்தமிடுவது போல் நான் எழுது கோலை முத்தமிட்டேன். ஜெமினி என்னைத் தனியே அழைத்துச் சென்று சொன்னார், "இனிமே இங்கே நீதான் ஆஸ்தான ஆசிரியர் அந்த முதல் படம் அண்ணன் தங்கை பாசத்திற்கு இன்று வரை ஏன்? என்றைக்குமே ஒரு எல்லையாகவும் - எடுத்துக் காட்டாகவும் திகழ்கின்ற பசுமையான "பாசமலர்" இரண்டாவது படம் 'படித்தால் மட்டும் போதுமா' - தொடர்ந்து "பார்த்தால் பசிதீரும்" "பார் மகளே பார்" 'புதிய பறவை" 'அன்னை இல்லைம்;' 'தெய்வமகன்' 'தங்கை' 'இருமலர்கள்' 'தேனும் பாலும்' 'பைலட் பிரேம்நாத்' இப்படி முத்து முத்தாக நடிகர் திலகத்தின் முப்பது படங்களுக்கு மேல் எழுதினேன் அவருக்கு அதிகமான படங்கள் எழுதியவன் நான் என்று தான் நினைக்கிறேன்.

பாசத்தால் என்னை "ஆரூரான்' என்று அழைக்கும் ஒரே ஒரு நாக்கு! அந்த நாக்கில் மணக்கும் நற்றமிழ்! அந்த நற்றமிழ் நாக்கிலிருந்து தாளகதியுடன் பீறிட்டு வெளிப்படும் வ்சனக் கோர்வையின் இளமைக் கோலம் ஆகா! அவர் ஒருவரே! என்றைக்கும் அவர் ஒருவரே! நடிகர் திலகம் சிவாஜி கணேசன்! ஒரு நடிப்புச் சாசனம்! சரித்திரம் படைத்த அந்தச் சாசனத்தின் புகழ்பரப்பும் புரட்டிப் பார்க்கப்படும். கதாநாயகிகள் வரிசையில் நடிகையர் திலகம் அவர்களுடனான "பாசமலர்" நினைவுகள் அடுத்த இதழில் நிறைவு பெறும்...


ஐ கிரகப் பொருத்தம் பார்த்தல்
ஐ சுபமுகூர்த்தம் கணித்தல்
ஐ சாதகக் குறிப்பு கணித்தல்
ஐ பலன் பார்த்தல்
ஐ எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்



☎: 299-8361

YARLCAN
STEAM CLEANING





உங்கள் சகலவிதமான
Cleaning
தேவைகளுக்கும்
அழையுங்கள்
மோகன்

Tel: 724-9085
Pager : 600 -0335
Cell: 721-9709

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்

## பகுதி (14)



பொதுவாக ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டுமல்ல கனடா, அமெரிக்காவில் உள்ள ஏனைய மாகாணங்களிலும் வாகனம் செலுத்த கற்றுக் கொள்பவர்கள் பலமணி நேரங்கள் வாகனங்களில் பயிற்சி எடுப்பது மட்டுமல்லாது வாகனங்களில் மேற்கொள்ளும் பயிற்சி நெறிகள், அது தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் பற்றி பூரணமாக தெரிந்து கொள்வதற்கு வகுப்பறை (In class driving Training) பயிற்சி திட்டங்களும் பாடத்திட்டங்கள் மாகாண அரசின் போக்குவரத்து அமைச்சினால் உருவாக்கப்பட்டு நடாத்தப்படுகின்றன.

முழுமையான வாகனசாரதி பயிற்சி = வாகனத்தில் பயிற்சிகள் + வகுப்பறை பயிற்சிகள்
Full Driver's Education Course = In car Training + In Training Class

முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டது போல முழுமையான வாகன சாரதி பயிற்சி நெறியினை பூரணமாக முடித்துக் கொண்ட விபரங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கும் போதே இக்குறிப்பிட்ட பயிற்சியாளருக்கு சான்றிதழ் வழங்குவார்கள்.

வாகனங்களுக்கு காப்புறுதி வ்ழங்கும் கம்பனிகள் இத்தகைய பயிற்சி நெறிகளை முடித்து சான்றிதழ் பெற்றோருக்கு காப்புறுதி விலையில் ஜாக்கிரதையான ஆபத்தில்லாத சாரதி பயிற்சி பெற்றவர்கள் என்ற ஒரு நம்பிக்கையில் குறைந்த விலையில் வழங்குவது வழமையாகும். ஆனால் எம் இனத்தவர்கள் பலர் வகுப்பறைப் பயிற்சிகள் அவசியம்தானா என்ற கேள்வியில் அப்பயிற்சி நெறிகளுக்கு சென்று பல விடயங்களைக் கற்று தெளியவேண்டும் என்பதில் தயக்கம் காட்டுவது வழமையாகும்.

**"வாகனம் செலுத்துதல்"** என்பது ஒரு மனிதனின் "உளவியலுடன்" ஒன்றிணைக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

- **"ஒரு மனோ வலிமை"** -**"அச்சம் என்பது இல்லாத நிலைமை"**
- **"வாகனம் செலுத்துதல் தொடர்பான ஒரு ஆழமான கற்பனை வளம்"**
- **"வாகனம் செலுத்துவதில் அதிகூடிய ஆர்வம்"**

ஆகிய மனிதனின் உளவியலுடனும் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒரு உறுதி தன்மை இல்லாமல் சாரதி ஆசனத்தில் ஏறி அமர்ந்து பயிற்சி பெறுபவர்கள் விழலுக்கு இறைத்த நீராகவே போவதுண்டு.

வகுப்பறை பாடத்திட்டத்தில் அமர்ந்து அங்கு ஒரு பயிற்சிபெற்ற திறமையான ஆசிரியரின் விளக்கத்தினையோ அல்லது அங்கு உசாத்துணை ஆதாரங்கள், வீடியோ படங்களின் உதவிகளினூடாகவோ கற்பிக்கப்படும் போது அதனை பூரணமாக ஆர்வத்துடன் பின்பற்றுபவர்கள் வாகனம் செலுத்துதல் தொடர்பான ஒரு ஆழமான கற்பனை வளத்தினை தங்கள் மனதில் வளர்த்துக் கொள்கின்றனர்.

வீதியில் வாகன அசைவுகளின் ஒவ்வொரு அம்சமும், அந்த அசைவுகளில் உருவாகும் ஆபத்துக்கள், அவ் ஆபத்துக்களில் சரியான பாதுகாப்புக்கள், இவைகள் தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் யாவும் ஆழ் மனதில் ஒரு கற்பனையாக உருவாகி, அது ஆழமாக பதியும் போது அத்தகைய ஒரு பயிற்சியாளர் வாகனம் செலுத்தப் பழகி கொள்வதில் இலகுவாக முன்னேறுவதுடன், பாதுகாப்பான வாகன சாரதியாகவும் உருவாகி கொள்கிறார்.

இத்தகைய மனிதனின் உளவியலும், நடைமுறை வாழ்க்கையின் அல்லது ஒரு பயிற்சி நெறியில் அதன் செயல்பாடுகளும் மற்றும் இவைகளின் தொடர்புகளும் பற்றி பிரிட்டிஷ் மனோ தத்துவ நிபுணர் திரு. ஜேம்ஸ் ஆலன் அவர்கள் தமது பல நூல்களில் தெளிவு பண்ணுகிறார். இதே கோட்பாடுகளையே இந்திய விஞ்ஞானி டாக்டர். எம். எஸ். உதயமூர்த்தி மனோதத்துவமும் அதனுடன் தொடர்புடைய நடைமுறை வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தில் ஒவ்வொரு பயிற்சி நெறியிலும் எவ்வாறு "ஆழ்மனம்" செயல்படுகிறது என்பதனை தமது சகல நூல்களிலும் தெளிவுபடுத்துகிறார்.

"மனம்" என்னும் பண்படுத்தப்பட்ட மண்ணில் ஒரு பயிற்சி தொடர்பான "எண்ணங்கள்", "கற்பனைகள்" என்பன விதைக்கப்படும் விதைகள். அவ்விதைகளில் இருந்து உருவாகி வளர்ந்து வரும் மரங்கள், கனிகள் என்பவை போன்றவையே அதன் செயற்பாடுகள்.

இவ்உதாரணத்தினையே நாம் இங்கு ஒரு சாரதி பயிற்சி நெறிக்கும் பிரயோகப்படுத்த வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட உளவியல் அம்சங்களுக்கு உள்ளடக்கப்பட்டவர்களுக்கு இலகுவாக விரைவாக பயிற்சி பெற்றுகொள்வதும், இவ் உளவியல் அம்சங்களுக்கு உள்ளாகாதவர்கள் வாகனம் செலுத்துவதில் மிகவும் சிரமப்பட்டு முன்னேறுவதும் சில சந்தர்ப்பங்களில் முன்னேற்றமே இல்லாமல் போவதும் எங்கள் தொழில் அனுபவங்களில் கண்ட உண்மைகளாகும். சில நேரங்களில் வாகனம் செலுத்தும் பயிற்சியுடன் மனோதத்துவ நிபுணர்கள் வழங்கும் வழிகாட்டல்கள், பயிற்சிகளையும் சேர்த்து வழங்க வேண்டிய நிலைமையும் ஏற்படுவது உண்டு.

சுருக்கமாக சொல்லப் போனால் வாகனம் செலுத்தப் பழகும் ஒரு மணிநேரத்தில் அம்முழு நேர வாகன அசைவுகள், அவ் அசைவுகளின் போது நாம் மேற்கொள்ளும் அவதானங்கள் தொடர்பான தொடர்ச்சியான கற்பனை வளத்தினை மனதில் பயிற்சி பெற்றுவிட்டு பயிற்சியினை தொடங்கும் போது மிக விரைவாக கற்று தேர்ந்து விடுவீர்கள்.

